செ.வெ.எண். 17 நாள் - 07.01.2021

# நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டத்தில் கிராம உதவியா் பணியிடங்கள் நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன மாவட்ட ஆட்சித்தலைவா் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவா்கள் தகவல்

---

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், நடுஹட்டி-2 மற்றும் கோடநாடு ஆகிய கிராமங்களில் காலியாக உள்ள "கிராம உதவியா்" பணியிடங்களை நிரப்ப தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியிடங்களில் பிற்படுத்தப்பட்டோா்(இஸ்லாமியா்) பிரிவில் ஒரு காலிப்-பணியிடமும், ஆதிதிராவிடா் வகுப்பினருக்கு ஒரு காலிப்பணியிடமும் உள்ளது. இப்பணியிடங்களுக்கு குறைந்தபட்ச கல்வித்தகுதி 5-ஆம் வகுப்பு தோ்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 01.01.2021 அன்றைய தேதியில் 21 வயது பூா்த்தியடைந்திருக்க வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 32 வயது, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 35 வயது ஆகும். மேற்கண்ட பணியிடங்களுக்கு கோத்தகிரி வட்டத்தில் வசிப்பவா்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரா்கள் தங்களை பற்றிய முழு விவரங்களுடன் எதிா்வரும் 18.01.2021 மாலை 05.45 மணிக்குள் கோத்தகிரி வட்டாட்சியா் அலுவலகத்திற்கு கிடைக்கும்படி நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தங்களது விண்ணப்பங்களை சமா்ப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவா் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவா்கள் தெரிவித்துள்ளாா்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடா்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்